සියලු ම හිමිකම් ඇවිරිණි/
முழுப் பதிப்புரிமையுடையது/
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

| 42 | T | I, II |
|---|---|---|

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2010 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2010 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2010

කර්ණාටක සංගීතය I, II
கர்நாடக சங்கீதம் I, II
Carnatic Music I, II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

## கர்நாடக சங்கீதம் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் **I** இற்குரிய புள்ளிகள் **40** ஆகும்.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **(1), (2), (3), (4)** என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. சபாகானத்தைச் சேர்ந்த உருப்படி வகை
   (1) கீதம் (2) ஜதிஸ்வரம் (3) பதம் (4) இலட்சணகீதம்

2. $|_7$ U 0 என்னும் அங்கங்களையுடைய தாளம்
   (1) திஸ்ரஜாதி ஜம்பை தாளம் (2) சதுஸ்ரஜாதி ஜம்பை தாளம்
   (3) கண்டஜாதி ஜம்பை தாளம் (4) மிஸ்ரஜாதி ஜம்பை தாளம்

3. பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வேறுபாடு இல்லாத உருப்படி
   (1) வர்ணம் (2) கீர்த்தனை (3) தில்லானா (4) கீதம்

4. 'இந்த இன்பம்' என்ற கீர்த்தனை அமைந்துள்ள இராகம்
   (1) பிலஹரி (2) மோகனம் (3) சுத்தசாவேரி (4) கல்யாணி

5. கோமள, தீவ்ர பேதமடையாத ஸ்வரங்கள்
   (1) ரி, க, ம, த, நி (2) ம, ப (3) த, நி (4) ஸ, ப

6. பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்களுள் ஒன்பதாவது ஸ்வரஸ்தானம்
   (1) சுத்தமத்திமம் (2) சுத்ததைவதம் (3) சுத்தரிஷபம் (4) சதுஸ்ருதிதைவதம்

7. தமிழிசையில் விளரி குறிக்கும் ஸ்வரம்
   (1) தைவதம் (2) காந்தாரம் (3) பஞ்சமம் (4) ரிஷபம்

8. ஆதிதாள தான வர்ணத்தின் அங்கங்கள்
   (1) பல்லவி, அனுபல்லவி, சரணம்
   (2) பல்லவி, அனுபல்லவி
   (3) பல்லவி, முத்தாயிஸ்வரம், சரணம்
   (4) பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ்வரம், சரணம், சரணஸ்வரங்கள்

9. சாமகானம் பாடப்பட்ட இராகம்
   (1) கல்யாணி (2) தோடி (3) கரஹரப்பிரியா (4) சங்கராபரணம்

10. நீ ; ; ஸ்ா என்ற கோர்வையின் அட்சரங்களின் எண்ணிக்கை
   (1) 7 (2) 8 (3) 10 (4) 9

[பக். 2 ஐப் பார்க்க

11. பின்வரும் வாத்தியங்களுள் கர்நாடக இசையில் பயன்படுத்தப்படும் வாத்தியங்கள்
   (1) மிருதங்கம், தபேலா, டொல்கி
   (2) வீணை, புல்லாங்குழல், மிருதங்கம்
   (3) பியானோ, ஒர்கன், கிற்றார்
   (4) தம்புரா, வயலின், ஸரோட்

12. A - தாளத்தின் முதல் மூன்று அங்கங்களும் திரியாங்கம் என அழைக்கப்படும்.
   B - லகுவின் அட்சர எண்ணிக்கை ஜாதிகளுக்கு ஏற்ப மாறுபடும்.
   C - தாளத்தின் ஏழு அங்கங்களும் ஷடங்கம் என அழைக்கப்படும்.
   D - துருதத்தின் குறியீடு U ஆகும். இதன் எண்ணிகை 2 ஆகும்.
   மேற்குறிப்பிட்ட கூற்றுகளில் சரியானது
   (1) A, C (2) C, A (3) C, D (4) A, B

13. ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், காகலிநிஷாதம் ஆகிய ஸ்வரஸ்தானங்களை எடுத்துக்கொள்ளும் இராகம்
   (1) பந்துவராளி (2) கல்யாணி (3) சங்கராபரணம் (4) ஹரிகாம்போதி

14. 'திமிர உததி' என்ற திருப்புகழின் நடை
   (1) திஸ்ரம் (2) கண்டம் (3) சதுஸ்ரம் (4) மிஸ்ரம்

15. A - பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வித்தியாசம் கொண்டது.
   B - ஒவ்வொரு அங்கமும் வெவ்வேறு இராகங்களில் இயற்றப்பட்டிருக்கும்.
   C - குறைந்தது நான்கு இராகங்களில் இயற்றப்பட்டிருக்கும்.
   D - இவ்வுருப்படியின் சாகித்தியம் பக்திரசமாகவோ, சிருங்காரரசமாகவோ அமைந்திருக்கும்.
   மேற்குறிப்பிடப்பட்ட அம்சங்களையுடைய உருப்படி
   (1) வர்ணம்
   (2) சௌக்ககாலக் கீர்த்தனை
   (3) இராகமாலிகை
   (4) பதம்

16. பந்துவராளி இராகத்தின் மத்திமத்தை கோமள ஸ்வரமாக மாற்றினால் வரும் இராகம்
   (1) மாயாமாளவகௌளை (2) கீரவாணி (3) சங்கராபரணம் (4) கல்யாணி

17. கடபயாதி ஸங்க்யைக்காக தோடி இராகம் பின்வருமாறு அழைக்கப்படுகிறது
   (1) ஜனதோடி (2) ஹனுமதோடி (3) சுத்ததோடி (4) தேசியதோடி

18. 72 மேளகர்த்தா அமைப்பு பற்றிப் பின்வரும் கூற்றுகளில் **பொருத்தமற்றது**
   (1) வேங்கடமகி சதுர்தண்டிப் பிரகாசிகை என்னும் நூலில் 72 மேளகர்த்தா அமைப்பை விளக்கியுள்ளார்.
   (2) வேங்கடமகி 72 மேளங்களுக்கும் பெயர் பட்டியலை சதுர்தண்டிப் பிரகாசிகை என்னும் நூலில் கொடுத்துள்ளார்.
   (3) வேங்கடமகியவர்கள் தமது காலத்தில் இருந்த 19 மேளங்களையும் கல்பித மேளகர்த்தாக்கள் எனக் குறிப்பிடுகிறார்.
   (4) கோவிந்தாசாரியார் கிரம ஸம்பூர்ண ஆரோகண அவரோகண முறையுடன்கூடிய 72 மேள இராகங்களைக் குறிப்பிடும் கனகாங்கி - ரத்னாங்கி என்னும் மேளகர்த்தா பட்டியலை உருவாக்கினார்.

19. கர்நாடக இசைக் கச்சேரிகளில் வாசிக்கப்படும் பிரதான தாளவாத்தியம்
   (1) கடம் (2) கஞ்சிரா (3) மிருதங்கம் (4) தபேலா

20. அக்னி சக்கரத்தில் இடம்பெறும் மேளங்கள்
   (1) 1 - 6 (2) 7 - 12 (3) 13 - 18 (4) 19 - 24

21. ஹிந்துஸ்தானி இசையில் கமாஜ்தாட் எனப்படும் இராகத்திற்கு ஒப்பான கர்நாடக இராகம்
   (1) ஹரிகாம்போதி
   (2) மயாமாளவகௌளை
   (3) மோகனம்
   (4) தோடி

22. இராம நாடகக் கீர்த்தனையை தமிழில் இயற்றிய வாக்கேயகாரர்
   (1) அருணாசல கவிராயர்
   (2) பாபநாசம் சிவன்
   (3) கோபாலகிருஷ்ண பாரதியார்
   (4) முத்துத்தாண்டவர்

[பக். 3 ஐப் பார்க்க

23. ஸ் ்ரி க் ம் இப்பிரயோகம் அமைந்த ஸ்தாயி
   (1) அதிதாரஸ்தாயி
   (2) அனுமந்தரஸ்தாயி
   (3) மந்தரஸ்தாயி
   (4) தாரஸ்தாயி

24. மிஸ்ர சாபு தாளத்திற்குரிய ஜதிச் சொல்
   (1) தகிட
   (2) தக தகிட
   (3) தகிடதகதிமி
   (4) தகதிமி தக தகிட

25. 'குருகுஹ' என்ற முத்திரையை தமது கிருதிகளில் கையாண்ட வாக்கேயகாரர்
   (1) தியாகராஜ சுவாமிகள்
   (2) முத்துஸ்வாமி தீட்சிதர்
   (3) சியாமா சாஸ்திரிகள்
   (4) புரந்தரதாஸர்

- கீழே தரப்பட்டுள்ள ஸ்வர ஸாஹித்தியத்தை அடிப்படையாகக் கொண்டு **26** தொடக்கம் **29** வரையான வினாக்களுக்கு விடை தருக.

| | | | |
|---|---|---|---|
| பா / | மரீஸ // | த த // | ஸாஸா // |
| சா | மிநாதா | அருள் | வாயே |


26. மேலே கொடுக்கப்பட்டுள்ள உருப்படி யாது ?
   (1) சஞ்சாரி கீதம்
   (2) இலட்சணகீதம்
   (3) ஸ்வரஜதி
   (4) தேவாரம்

27. இவ் உருப்படி இயற்றப்பட்டுள்ள இராகம்
   (1) சங்கராபரணம்
   (2) காம்போதி
   (3) மோகனம்
   (4) சுத்தசாவேரி

28. இவ் உருப்படி அமைந்துள்ள தாளம்
   (1) சதுஸ்ரஜாதி ரூபகம்
   (2) மிஸ்ரஜாதி ரூபகம்
   (3) கண்டஜாதி ரூபகம்
   (4) சங்கீர்ணஜாதி ரூபகம்

29. இவ் உருப்படியில் ஓர் ஆவர்த்தனம் எடுத்துக்கொள்ளும் மொத்த அட்சரம்
   (1) 5
   (2) 6
   (3) 7
   (4) 8

- கீழே தரப்பட்டுள்ள ஆரோகண - அவரோகண வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டு **30** தொடக்கம் **33** வரையான வினாக்களுக்கு விடை தருக.




30. மேற்குறிப்பிடப்பட்ட ஆரோகண - அவரோகண ஸ்வரஸ்தான வரைபடம் குறிக்கும் இராகம்
   (1) மோகனம்
   (2) ஹம்சத்வனி
   (3) ஆரபி
   (4) மத்தியமாவதி

31. வரைபடம் குறிக்கும் இராகத்தின் ஆரோகண அவரோகணம்
   (1) ஸ ரி க ப த ஸ் - ஸ் த ப க ரி ஸ
   (2) ஸ ரி ம ப நி ஸ் - ஸ் நி ப ம ரி ஸ
   (3) ஸ ரி க ப நி ஸ் - ஸ் நி ப க ரி ஸ
   (4) ஸ ரி ம ப த ஸ் - ஸ் த ப ம ரி ஸ

32. வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள இராகத்தின் வர்ஜ ஸ்வரங்கள்
   (1) ரி, ப
   (2) க, த
   (3) க, நி
   (4) க, ப

[பக். 4 ஐப் பார்க்க

19934

33. வர்ஜ இராகப் பிரிவில் இந்த இராகம் எவ்வகையைச் சேர்ந்தது ?
   (1) ஔடவ - ஔடவம்
   (2) ஷாடவ - ஷாடவம்
   (3) ஔடவ - சம்பூர்ணம்
   (4) ஷாடவ - சம்பூர்ணம்

34. இராமநாடகம் அரங்கேற்றப்பட்ட தலம்
   (1) திருவரங்கம் (2) திருச்செந்தூர் (3) திருவாலவாய் (4) திருத்தணிகை

35. சியாமா சாஸ்திரிகளின் உருப்படிகள் எதற்கு ஒப்பானவை ?
   (1) நாளிகேர ரஸத்திற்கு
   (2) திராட்சை ரஸத்திற்கு
   (3) கதலி ரஸத்திற்கு
   (4) மாம்பழ ரஸத்திற்கு

36. தற்போது வழக்கத்திலுள்ள வயலினின் அமைப்பை முதன் முதலில் உருவாக்கியவர்
   (1) பாலுஸ்வாமி தீட்ஷிதர் (2) ஸ்ட்ராடிவேரியஸ் (3) வடிவேலு (4) சின்னையா

37. தமிழிசை இயக்கம் பரவிய காலப் பகுதி
   (1) 15 ஆம் நூற்றாண்டு (2) 7 ஆம் நூற்றாண்டு (3) 20 ஆம் நூற்றாண்டு (4) 16 ஆம் நூற்றாண்டு

38. ஸ்வரத் தொகுதிகள் அல்லது ஸ்வர அடுக்குகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ச்சியாக வரும் சங்கீதம்
   (1) ஹார்மனிக்கல் சங்கீதம்
   (2) மெலடிக்கல் சங்கீதம்
   (3) பாலிபோனி சங்கீதம்
   (4) இந்திய சங்கீதம்

39. தமிழிசையில் ஆரபி இராகத்திற்கு இணையான பண்
   (1) பழம் பஞ்சுரம்
   (2) செந்துருத்தி
   (3) புறநீர்மை
   (4) பழந்தக்க ராகம்

40. வீணை வாத்தியம் தற்காலத்து உருவத்தையும் அமைப்பையும் பெற்று முழுவளர்ச்சியடையப் பெற்ற காலம்
   (1) இராஜராஜசோழன் ஆட்சிபுரிந்த காலம்
   (2) மகேந்திரவர்மன் ஆட்சிபுரிந்த காலம்
   (3) ரகுநாத மன்னன் ஆட்சிபுரிந்த காலம்
   (4) ஸ்வாதிதிருநாள் மகாராஜா ஆட்சிபுரிந்த காலம்

The National e-learning Portal for The General Education

* *

[பக். 5 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**42 | T | I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2010 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2010 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2010

කර්ණාටක සංගීතය I, II
கர்நாடக சங்கீதம் I, II
Carnatic Music I, II

## கர்நாடக சங்கீதம் II

※ **முதலாம்** வினாவிற்கும், ஏனைய வினாக்களுள் **நான்கு** வினாக்களைத் தெரிவுசெய்து மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ வினாத்தாள் **II** இற்குரிய புள்ளிகள் **60** ஆகும்.

**1.** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடை எழுதுக.

(i) விஷம எடுப்பின் **இரண்டு** வகைகளைக் குறிப்பிடுக.

(ii) வில்லுப்பாட்டு நிகழ்ச்சி தயாரிப்பதற்குப் பொருத்தமான **இரண்டு** கருப்பொருள்களைக் குறிப்பிடுக.

(iii) நிபந்தம் என்றால் யாது ?

(iv) குடம், தண்டி, கழுத்து, நான்கு பிரடைகள், நான்கு தந்திகள், மணிக்காய்கள், ஜீவாளி ஆகிய பாகங்களைக் கொண்ட வாத்தியக் கருவி யாது ?

(v) முத்துத்தாண்டவர் பதங்கள் எவ்வாறு சிறப்பித்து கூறப்படுகின்றன ?

(vi) ஆரோகண, அவரோகணத்தில் ஸ்வரங்கள் வரிசைக் கிரமமின்றி வரும் இராகம் எவ்வாறு அழைக்கப் படுகின்றது ?

(vii) கொல்லி, கொல்லிக்கௌவாணம், காந்தாரம், பியந்தைக்காந்தாரம் ஆகிய நான்கு பண்களுக்கும் ஒப்பான கர்நாடக இசை இராகம் யாது ?

(viii) கி.பி 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து பஜனை பத்ததிக்கு வழிகோலியவர் யார் ?

(ix) தியாகராஜஸ்வாமிகள் இயற்றிய இசைநாடகமொன்றினைக் குறிப்பிடுக.

(x) ஒரு பக்கம் கழியினாலும் மறுபக்கம் விரல்களினாலும் வாசிக்கப்படும் தாள வாத்தியக்கருவி யாது ?

**2.** (அ) மங்கள வாத்தியமாகக் கருதப்படும் காற்று வாத்தியம் யாது ?

(ஆ) அவ்வாத்தியத்தின் **இரண்டு** வகைகளைக் குறிப்பிடுக.

(இ) அவ்வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.

(ஈ) அவ்வாத்தியம் வாசிப்பதில் பிரபல்யமான **இரண்டு** வித்துவான்களின் பெயர்களையும் குறிப்பிடுக.

**3.** பின்வரும் இராகங்களுள் **ஓர்** இராகத்திற்கு இலட்சணத்தை விரிவாக எழுதுக.

(அ) 57 ஆவது மேளகர்த்தா இராகம்

(ஆ) கல்யாணி

(இ) மோகனம்

**4.** (அ) பின்வரும் கூற்றுகளுக்குப் பொருத்தமான உருப்படி வகையைக் குறிப்பிடுக.

(i) ஸாஹித்தியத்தில் வார்த்தைகளையும் ஸ்வரங்களையும் ஜதிகளையும் கொண்ட உருப்படி

(ii) இராக கதம்பம் என அழைக்கப்பட்ட உருப்படி

(iii) ஸாஹித்தியத்தில் மாத்ருகா பதங்கள் இடம்பெறும் உருப்படி

(iv) அப்பியாசகானத்திற்கும் சபாகானத்திற்கும் பொதுவான உருப்படி

(ஆ) மேற்குறித்த உருப்படி வகைகளுள் நீர் விரும்புகின்ற ஓர் உருப்படியின் இலட்சணத்தை விரிவாக எழுதுக. (இயற்றியவர் பெயர், உதாரணம் என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும்).

[பக். 6 ஐப் பார்க்க

5. (அ) லகுவின் ஐந்து ஜாதி பேதங்களையும் குறிப்பிடுக.

(ஆ) இவ் ஐந்து ஜாதி பேதங்களினால் சப்ததாளங்களும் 35 தாளங்களாக விரிவடையும் முறையை உதாரணம் தந்து விவரிக்க.

6. தமிழிசை வளர்ச்சிக்கு கோபாலகிருஷ்ண பாரதியார் ஆற்றிய பங்களிப்பினைப் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

(அ) வாழ்ந்த காலம்

(ஆ) பெற்றோர்

(இ) இளமைப் பருவம்

(ஈ) இசைப் பயிற்சி

(உ) இயற்றிய இசைநாடகங்கள்

(ஊ) இயற்றிய உருப்படிகள் - அவற்றின் சிறப்பம்சங்கள்

7. "17ஆம், 18ஆம் நூற்றாண்டு கர்நாடக இசை வளர்ச்சியில் ஒரு பொற்காலம்" இக்கூற்றின் பொருத்தப்பாட்டை நியாயப்படுத்துக.

**அல்லது**

நாட்டார் பாடல்களின் சிறப்பம்சங்களை மதிப்பிடுக.

❊ ❊ ❊

The National e-learning Portal for The General Education